பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
23 02 2025 **SUNDAY** 12 40 **PM**
ஆகாஷ்வாணி - <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, அனைத்து துறைகளிலும் பெண்கள் முன்னேற்றம் அடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாடுமுழுவதும் 5 லட்சத்திற்கும் அதிகமானோருக்கு காசநோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

3. ராணுவ தலைமை தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி, நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக பிரான்ஸ் சென்றுள்ளார்.

4. தெலங்கானாவில் சுரங்கப்பாதையின் மேற்கூரை இடிந்து விழுந்த விபத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

5. சிட்னியில் நடைபெற்ற சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் சௌரவ் கோஷல் பட்டம் வென்றார்.

>>>>>><<<<<<

கடந்த பத்தாண்டுகளில் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, அனைத்து துறைகளிலும் பெண்கள் முன்னேற்றம் அடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று காலை ஒலிபரப்பாகிய மன்கிபாத் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (1) 54 செகண்ட்ஸ்)

விண்வெளித் துறையில் இந்தியா சாதனைகளை படைத்து வருவதாக பிரதமர் குறிப்பிட்டார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (2) 50 செகண்ட்ஸ்)

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணி நாடாக உருவெடுத்து வருவதாக அவர் கூறினார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (3) 38 செகண்ட்ஸ்)

பொதுத்தேர்வு எழுதும் மாணவர்கள், எவ்வித மனஅழுத்தமும் இன்றி நம்பிக்கையுடன் தேர்வுகளை எழுத வேண்டும் என்று திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (4) 44 செகண்ட்ஸ்)

உணவில் எண்ணெய் பயன்பாட்டை குறைத்துக் கொள்வதன் மூலம் உடல் ஆரோக்கியத்தை பாதுகாக்க முடியும் என்று அவர் கூறினார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (5) 64 செகண்ட்ஸ்)

இயற்கை மற்றும் வனவிலங்குகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் வலியுறுத்தினார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (6) 59 செகண்ட்ஸ்)

இதன் தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலி இன்றிரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>>><<<<<<

நாடுமுழுவதும் 5 லட்சத்திற்கும் அதிகமானோருக்கு காசநோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், காசநோயை முற்றிலும் ஒழிக்கும் வகையில் இதுவரை 10 கோடிக்கும் அதிகமானோருக்கு பரிசோதனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடு தோறும் சென்று நேரடியாக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

ராணுவ தலைமை தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி, நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக பிரான்ஸ் சென்றுள்ளார்.

பாரிஸில் உள்ள **Les Invalides**–ல் நடைபெறவுள்ள பேச்சவார்த்தையில் இரு நாடுகளுக்கு இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து விரிவான ஆலோசனை மேற்கொள்கிறார்.

இதில் பாதுகாப்புப் படையை நவீனப்படுத்துவது, கூட்டு ராணுவப் பயிற்சியை மேற்கொள்வது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வரும் வியாழக்கிழமை அன்று, இந்திய போர் நினைவிடத்திற்குச் சென்று முதல் உலகப் போரில் உயிர்நீத்த இந்திய வீரர்களுக்கு ஜெனரல் உபேந்திர திவேதி மரியாதை செலுத்துகிறார்.

>>>>>><<<<<<

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்...

*(சவுண்ட் பைட் - **Song** - 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் உலகின் மிகப்பெரிய ஆன்மிக திருவிழாவான மகா கும்பமேளாவில், இதுவரை 60 கோடியே 74 லட்சத்திற்கும் அதிகமானோர் புனித நீராடியுள்ளனர்.

உலகம் முழுவதிலுமிருந்து நாள்தோறும் லட்சக்கணக்கான பக்தர்கள் பிரயாக்ராஜிற்கு வந்தவண்ணம் உள்ளனர்.

மகா கும்பமேளாவில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் உத்தரபிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் இன்று பங்கேற்கிறார்.

இதையடுத்து, பக்தர்களின் வசதிக்காக விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - **Song** - 8 நொடிகள்)*

>>>>>><<<<<<

தெலங்கானா மாநிலம், ஸ்ரீசைலம் இடதுகாரை கால்வாய் சுரங்கப்பாதையின் மேற்கூரை இடிந்து விழுந்து நேரிட்ட விபத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

இந்த விபத்தில் 8 தொழிலாளர்கள் சிக்கியுள்ளதாகவும், 12க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் பேரிடர் மீட்புக் குழு, சிங்கரேனி நிலக்கரி சுரங்கத்தின் மீட்புக் குழு மற்றும் ராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அந்த செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

>>>>>><<<<<<

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, தமிழகத்தைச் சேர்ந்த 32 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது.

அவர்களது ஐந்து விசைப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

>>>>>><<<<<<

சிட்னியில் நடைபெற்ற சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் சௌரவ் கோஷல் பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரவு இறுதியாட்டத்தில் அவர் 11-2, 11-6, 11-2 என்ற செட்கணக்கில் எகிப்தின் **Abdel Rahman Nassar –**ஐ வென்றார்.

>>>>>>END<<<<<<